CPMD/FNC-BB/009/V.4

BROADBAND

# ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சி

பதிவிலக்கம்: PQ 7

(ஸ்ரீலரெ அலுவலரால் நிரப்பப்படவேண்டும்)

கணக்கு இல. ____________ CR NO. ____________

## அகலப்பட்டை புதிய இணைப்புக்கான விண்ணப்ப படிவம்

### 1. பொது விபரம்

1.1 முழுப்பெயர் — வண/திரு/திருமதி/செல்வி/பிற

a. பிறந்த திகதி D D M M Y Y Y Y

1.2 கம்பனியின் பெயர்/ பங்காண்மை பெயர்/ தனியுடைமை

1.3 பங்காண்மை எனில், சகல கூட்டுப்பங்காளர்களதும் பெயர்கள் முதலெழுத்துக்களுடன் (வணிகப்பதிவு சான்றிதழை இணைக்கவும்)
1.
2.
3.

1.4 தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/வணிகப்பதிவு இல.
(கொம்பனிச்சட்டம் 2007 இன் 7 ஆம் பிரிவின்படி, தே.அ.அ/கடவுச்சீட்டு பிரதியை இணைக்க)

1.5 சேவை வழங்கப்படவுள்ள முகவரி

1.6 இலவச சேவையாக ஸ்ரீலரெ கட்டணப்பட்டியலைப் பெறவிரும்பும் முறை (eBILL , myBILL விண்ணப்பங்களைத் தனியாக நிரப்புக)

a. ஸ்ரீலரெ கட்டணப்பட்டியலை மின்னஞ்சல் மூலமாகப்பெறுதல் (* ஸ்ரீலரெ eBILL சேவை) ☐ **அல்லது** தபால் மூலம் பெறுதல் ☐
(*For eBILL ஐ பதிவு செய்தவர்களுக்கு ஸ்ரீலரெ கட்டணப்பட்டியலின் காகிதப்பிரதி அனுப்பிவைக்கப்படமாட்டாது)

b. www.slt.lk (myBILL சேவை) மூலமாக உங்கள் கட்டணப்பட்டியலின் விபரங்களைப் பார்க்க விரும்புகிறீர்களா?

c. உங்கள் கட்டணப்பட்டியலை தபாலில் பெறவிரும்பினால், உங்கள் தபால் முகவரியைத் தருக (1.5 இல் குறிப்பிட்டதிலிருந்து வேறுபட்டிருந்தால்)

### 2. தொடர்பு விபரம்

2.1 பெயர்

2.2 பதவி (வணிக வாடிக்கையாளர்களுக்கு)

2.3 தொடர்பு இலக்கங்கள்: வதிவிடம் ____ கைத்தொலைபேசி ____
தொலை நகல் ____ மின்னஞ்சல் ____

3. ஸ்ரீலரெ அகலப்பட்டைச் சேவைக்கான தொலைபேசி இல.

4 பொதி விபரங்கள்

4.1 தேவைப்படுவது a) புதிய சேவை ☐
b) பொதி மாற்றம் ☐ வைத்திருக்கும் பொதி ____

4.2 பொதியின் பெயர் (பொருத்தமான பெட்டிக்குள் "X" என குறியிடுக)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| a. Web Lite ☐ | b. Entrée ☐ | c. Web Starter ☐ | d. Web Pal ☐ | e. Web Family ☐ | f. Web Surfer ☐ |
| g. Web Pro ☐ | h. Web Master ☐ | i. Web Champ ☐ | j. Web Life ☐ | k. Web Inspire ☐ | l. Web Premier ☐ |
| m. Student 1 ☐ | n. Student 2 ☐ | o. Other ……………………………. | | | |

User Name (i) ____ (ii) ____

4.3 வாடிக்கையாளருக்கு VMS, DNS,WEB சேவைகள்/அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மின்னஞ்சல் கணக்குகள் தேவைப்பட்டால், SLTNet விண்ணப்ப படிவத்தை தனியாக நிரப்பவேண்டும். (Web Master & Web Champ & Web Life போன்றவற்றுக்கு மட்டுமே பொருத்தமாகும்)

4.4 மின்னஞ்சல்,web,DNS சேவையுடனான நிலையான ஒரு IP முகவரி தேவையா? ஆம் ☐ இல்லை ☐
(web pro, web master, web champ, web life போன்றவற்றுக்கு மட்டுமே மேலதிக கட்டணத்துடன் வழங்கப்படும்)

4.5 ஸ்ரீலரெ உபகரணத்தை பொருத்துதல் பரிந்துரைக்கப்படுகிறது (இதற்கான கட்டணம் ரூ.500+ அரச வரிகள்)
ஸ்ரீலரெ இனால் உபகரணம் பொருத்தப்படத்தேவையில்லையெனில் இங்கே குறிப்பிடுக ☐

4.6 குறிப்புகள்: தனிச்சிறப்பான/ஊக்குவிப்பு/ கடப்பாடுள்ள பொதிகள் அல்லது பிற)

## அலுவலக பாவனைக்கு மட்டும் (ஸ்ரீலரெ அலுவலரால் நிரப்பப்படவேண்டும் )

வாடிக்கையாளர் அடையாள இல : ____ @ sltbb தொடர் இல: ____
திகதி ……………………………………………

**நிபந்தனைகளும் பொதுவிதிகளும்**

ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சி (இனிமுதற்கொண்டு 'ஸ்ரீலரெ' என்றழைக்கப்படும்) வழங்கும் அகலப்பட்டைச் சேவையை; இங்கே குறிப்பிடப்பட்டுள்ளதும் காலத்துக்குக்காலம் திருத்தப்படுகின்றதும் சம்பந்தப்பட்ட சட்டவாக்கத்தின் கீழுள்ள விதிமுறைகளின்படி உருவாக்கப்பட்டதும் ஸ்ரீலங்கா ரெலிகொம் இணையதளத்தில் உள்ளதுமான (www.slt.lk) நியதிகள் மற்றும் நிபந்தனைகளைப்பொறுத்து வாடிக்கையாளர் பெற்றும் தொடர்ந்து பயன்படுத்தியும் வருவர்.

1) இந்த உடன்படிக்கையானது, ஏற்கனவேயுள்ள இணைப்புக்கான, இருதரப்பினருக்கிடையேயுள்ள தொலைபேசிச்சேவை உடன்படிக்கையுடன் (புதிய தொ.பே சேவை/மெகாலைன் வழங்குதலுக்கான உடன்படிக்கை) சேர்த்து வாசிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட உடன்படிக்கையின் தவிர்க்கமுடியாத ஒரு அங்கமாகவும் இருக்கும். வாடிக்கையாளரினால் இங்கே வழங்கப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் குறிப்பிட்ட தொலைபேசிச்சேவை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட தகவல்களுக்கு உகந்ததாய் அமைவதுடன், இவ்விரு உடன்படிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்களைத் தொடர்ந்தும் பிணைக்கும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார். இங்கே குறிப்பிட்ட நிபந்தனைகள் வெறும் வழிமுறைகளேயென்றும் அதுசம்பந்தமான வாசகங்கள் ஸ்ரீலரெ இணைய தளத்தில் இன்னும் விபரமாகத்தரப்பட்டுள்ளன என்பதையும் சேவையில் ஏற்படும் மாற்றங்களைப்பற்றி அறிவதற்கு, வாடிக்கையாளர் இந்த உடன்படிக்கையில் நுழைவதற்கு முன்பும் பின்பும் அதை மிகக்கவனமாக வாசித்தறியவேண்டுமென்பதையும் ஏற்றுக்கொள்கிறார். இணையதளமானது, (இனிமுதற்கொண்டு 'இணையதளத்தைப் பார்க்க" என்று குறிப்பிடப்படும்) வாடிக்கையாளருக்கு முன்னதாக அறிவிக்கப்படாமல் காலத்துக்குக்காலம் மாற்றப்படலாம் என்பதையும், ஆனால் வாடிக்கையாளர் தமக்குரிய தகவல்களை அதுமூலமாக அறிந்துகொள்ளவேண்டும் என்பதையும் இச்சேவையைப் பயன்படுத்தும் காலகட்டத்தில் இந்த இணையதளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தாம் ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில், உடனடியாகத் தமது சேவை இணைப்பு துண்டிக்கப்படலாம் என்பதையும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார்.

2) சேவை ஆரம்பக்கட்டணம், பாவனைக்கட்டணம், மாதாந்த வாடகை, வரிகள், விதிப்பனவுகள் போன்றவை உள்ளடங்கலான ஆனால் வரையறுக்கப்படாதவற்றுக்கான கட்டணங்களை உரிய காலத்தில் வாடிக்கையாளர் செலுத்தவேண்டும்.

3) வாடிக்கையாளர் இணைய வசதிகளைப் பயன்படுத்தி; அரசாங்கம்/பாராளுமன்றம், ஒழுங்காற்று அமைப்புகள், சட்ட அமைப்பு அல்லது சட்ட நீதிமன்றம் போன்றவற்றால் வெளியிடப்பட்ட சட்டம்/வழிமுறைகள்/விதிகள்/கட்டளைகளை மீறும் நடவடிக்கைகளைச் செய்யக்கூடாது.

4) வாடிக்கையாளர் தமது இணைய இணைப்பினை மறுவிற்பனை செய்யவோ அல்லது மூன்றாம் தரப்பினர் பயன்படுத்துவதற்காக கட்டணம் அறவிடுவதோ கூடாது. இச்சேவையானது பொழுதுபோக்கிற்கும் தனிப்பட்ட பாவனைக்குமேயன்றி, பங்குபோடப்பட்ட பாவனைக்கோ மறுவிற்பனை செய்வதற்கோ வர்த்தகப்பயன்பாட்டுகோ அல்ல.

5) இணைய நடத்தை: ஸ்ரீலரெ இன் தனித்த கருத்து, ஸ்ரீலரெ சேவைகளை பிற வாடிக்கையாளர்கள் பயன்படுத்துவதையும் அனுபவிப்பதையும் தடுக்கும் அல்லது மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைச் செய்தல் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது. இவையாவன; ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்தல், சட்டவிரோதமான நடவடிக்கைகளைச் செய்தல் அல்லது அவற்றைச் செய்வது பற்றிக் கலந்துரையாடுதல், எந்தவொரு சட்டத்தையும் மீறும் எதையும் வெளியிடுதல், அனுப்புதல், பெறுதல், தரவுப்பரிமாற்றம், செய்தல், மின்னஞ்சல் அனுப்புதல், செய்திகளை அனுப்புதல், செய்திகளை வாசித்தல் அல்லது தரவு, உள்ளடக்கம், தகவல் அல்லது மென்பொருளையும் அனுப்புதல் போன்றவை உள்ளடங்கலான ஆனால் வரையறுக்கப்படாதவை தடை செய்யப்பட்டுள்ளதுடன், இந்த உடன்படிக்கையை மீறும் செயலாகவும் பொருள் கொள்ளப்படும். எனவே, வாடிக்கையாளர் இணைய சேவையைப் பயன்படுத்தி பெருந்தொகையான, மற்றும்/அல்லது வர்த்தக ரீதியான 'ஸ்பாம்' எனப்படும் தேவையற்ற செய்திகளை இணையத்தில் அனுப்பக்கூடாது. குறிப்பாக, பதிப்புரிமையின் கீழ் பாதுகாக்கப்பட்ட பொருட்களை, அதன் சொந்தக்காரரின்

அனுமதியின்றி எந்தவகையிலும் தரவேற்றம் செய்வதோ அல்லது மறுபிரதி செய்வதோ கூடாதென்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார். பொதுவாக, மூன்றாம் தரப்பினரின் அறிவார்ந்த ஆதன உரிமைகளை மீறுதலை ஒரு வாடிக்கையாளர் செய்தால் அது முக்கியமானதொரு மீறலாகப் பொருள்கொள்ளப்படும். (விபரங்களுக்கு இணையதளத்தைப் பார்க்க).

6) வாடிக்கையாளர் எந்தவிதத்திலும் அனுமதியற்ற கணிணிமுறைத் தகவல்களைப் பெறுதல், அல்லது மாற்றுதல் அல்லது மற்றைய பாவனையாளர்களின் சேவைகளுக்குத் தடங்கல் ஏற்படுத்தும் வகையில் சாதாரணமான அமைப்புமுறைத் தொழிற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தல் அல்லது தனக்குச் சொந்தமில்லாத இந்தவொரு இணையக்கணக்கிலும் பெறுவழியை ஏற்படுத்திக்கொள்ளல் (hacking என்னும் கணிணிப்பெறுவழிகளை உடைத்து தகவர்களைத் திருடுவது உட்பட்ட ஏமாற்றுவேலை - spoofing) போன்றவை உட்பட்ட ஆனால் வரையறுக்கப்படாதவற்றை ஶ்ரீலரெ இன் சேவைகளைப் பயன்படுத்திச் செய்வதானது, அவரின் சேவைத் துண்டிப்புக்கு காரணமாய்விடும். மேலும், வாடிக்கையாளரோ அல்லது வாடிக்கையாளரினால் அனுமதிக்கப்பட்ட எந்தவொரு நபரோ ஶ்ரீலரெ இனால் வழங்கப்பட்ட சேவையைப் பயன்படுத்தி அநீதியாக அல்லது சட்டவிரோதமாக ஶ்ரீலரெ வலையமைப்பை அலகீடு செய்தல் கூடாது. விபரங்களுக்கு இணையதளத்தைப் பார்க்க.

7) நியாயமான பாவனை (வரையறையற்ற இணையப்பொதிகளின் பாவனையாளர்களுக்கு மட்டும்): இணையதளத்தில் விபரிக்கப்பட்டவாறு, வாடிக்கையாளர்களுக்கு எல்லா நேரங்களிலும் வேகத்துடனான ஶ்ரீலரெ அகலப்பட்டை சேவை கிடைப்பதை ஶ்ரீலரெ உறுதிப்படுத்த விரும்புகிறது என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார். எனவே, வரையறையற்ற இணைய பொதியை வைத்திருக்கும் வாடிக்கையாளர், அச்சேவையைப் பிற ஶ்ரீலரெ வாடிக்கையாளர்களுக்கு நியாயமான முறையில் பயன்படுத்தவேண்டும்.

8) பாதுகாப்பு: வாடிக்கையாளர் தனது பாவனையாளர் பெயரை எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் வழங்குவதோ அல்லது அந்தமாதிரியான தகவல்களை வெளிப்படுத்துவது மாதிரியான முறையில் நடந்துகொள்வதோ கூடாது. இந்த நிபந்தனை எந்தவிதமாகவோ மீறப்படும்பட்சத்தில், அதற்கு வாடிக்கையாளரே பொறுப்புள்ளவராகிறார். அனுமதிக்கப்பட்ட பாவனையாளர்களே தனது கணிணியின் வளங்களைப் பயன்படுத்துவதற்குரிய பொறுப்பினை ஏற்கும் வாடிக்கையாளர், தனது கணிணியைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கையையும் எடுக்கவேண்டும். அந்தமாதியான அனுமதி பெற்ற/ அனுமதியற்ற பாவனையாளர்களினால் இந்த உடன்படிக்கை மீறப்படும் பட்சத்தில், அதற்கு வாடிக்கையாளர் மட்டுமே பொறுப்பாவார்.

9) ஶ்ரீலரெ அமைப்புமுறைகளை அல்லது இணையம் மூலமாகச் செல்லும் தகவல்களை ஶ்ரீலரெ கட்டுப்படுத்தவில்லை. அவ்வாறு செல்லும் தகவல்களால் ஏற்படக்கூடும் அபாயத்துக்கு வாடிக்கையாளர் மட்டுமே பொறுப்பாவார். அந்தமாதிரியான உள்ளடக்கங்களின் சரிபிழைகளுக்கு ஶ்ரீலரெ பொறுப்பாகாது. இச்சேவையைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட எந்தவொரு இழப்புக்கோ பாதிப்புக்கோ அல்லது சேவைத்தடங்கல்களுக்கோ ஶ்ரீலரெவையோ அல்லது அதன் ஒப்பந்தகாரர்களையோ அதன் உறுப்பினர்களையோ அல்லது ஊழியர்களையோ பொறுப்பாக்க முடியாது.

10) நன்னம்பிக்கையுடனான, நியாயமான வர்த்தக முயற்சிகளைச்செய்து, தனது சேவைகள் கூடியவரையில் மிகக்குறைந்த தடங்கல்களுடன் கிடைப்பதை ஶ்ரீலரெ உறுதிசெய்தாலும், அச்சேவைகள் இடைத்தடங்கலற்றோ அல்லது பழுதுகளற்றோ இருப்பதற்கு அது உத்தரவாதமளிக்காது.

11) ஶ்ரீலரெ இன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவகையில் வாடிக்கையாளரின் செயல்களாலோ அல்லது அவரது முனைய உபகரணத்தாலோ 'வைரஸ்' அல்லது 'ஸ்பாம்' நிறைந்த தரவிறக்கம் மற்றும் தரவேற்றங்களினால் ஏற்படும் வேண்டுமென்றே செய்யப்படும் அழிவு, அதிகாரமற்ற செயல், சட்டவிரோத செயல்கள் உட்பட்ட, ஆனால் வரையறுக்கப்படாத செயல்களுக்கான நட்ட உத்தரவாதத்தை வாடிக்கையாளர் ஶ்ரீலரெ இற்கு அளிக்கவேண்டும்.

12) எமது சேவையைப் பயன்படுத்தியமையால் அல்லது பயன்படுத்த முடியாமையினால் வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட மறைமுகமான, தனிப்பட்ட, விளைவாந்தன்மையான அல்லது தண்டிக்கின்ற இழப்புகள்/பாதிப்புகள்/உரிமைக்கோரிக்கைகளுக்கு ஸ்ரீலரெ பொறுப்பாகாது.

13) வாடகை செலுத்தி Web Pro/Web Master/ Web Champ/ Web Life பொதிகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர், இவற்றுடன் பெறுமதிசேர் சேவையாகத் தமக்கு வழங்கப்பட்ட நிலையான ஐ.பி முகவரியானது எப்போதுமே ஸ்ரீலரெ இன் சொத்தாகவே இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்கிறார்.

14) வாடிக்கையாளர் இச்சேவையினதும் ஸ்ரீலரெ இனதும் நியதிகள், நிபந்தனைகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் போன்றவற்றுடன், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், அறிமுகங்கள், திருத்தங்கள், சட்ட நீக்கங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் போன்றவற்றையும் பின்பற்றவேண்டும். வாடிக்கையாளர் இச்சேவையைத் தொடர்வதானது, இந்தவிதமான எதிர்கால மாற்றங்கள், அறிமுகங்கள் போன்றவற்றுக்கு அவர் உடன்படுகிறார் என்பதையே காட்டும்.

15) வாடிக்கையாளர் இங்கு வரையப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளை எந்தவகையிலும் மீறினாலோ அல்லது ஸ்ரீலரெ தனது இணையதளத்தில் வெளியிட்டிருக்கும் ஏற்பாடுகள் போன்றவற்றுடன், தொலைபேசிச்சேவை உடன்படிக்கை மற்றும் பொதுவான சட்டத்தை மீறினாலோ, அவரின் பாவனையாளர் கணக்கினை இடைநிறுத்தும் உரிமை ஸ்ரீலரெ இற்கு உண்டு. வாடிக்கையாளர் மீள் இணைப்புக்கட்டணம் மற்றும் சகல நிலுவைகளையும் தீர்க்குமிடத்து, ஸ்ரீலரெ மறுபடியும் அவருக்கான சேவையை வழங்கும்.

16) ஸ்ரீலரெ வாடிக்கையாளர் ஒருவர், ஸ்ரீலரெ வழங்கும் சேவைகளைப் பயன்படுத்தி, ஒழுக்கம், சமயம், இனம் அல்லது அரசியல் அடிப்படையிலோ அல்லது வசைமொழி, இழிவுபடுத்தும் மரியாதையற்ற, ஆபாசமான அல்லது தீங்கு விளைவிக்கின்ற தன்மையிலோ வெளியிடப்படும் தரவுகள் போன்றவை பற்றியதில் ஸ்ரீலரெவுக்கும் மூன்றாம் தரப்பினரின் உரிமைக்கோரிக்கைக்கும் நட்ட உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

17) வாடிக்கையாளர் ஸ்ரீலரெ இன் கூட்டாண்மை கௌரவத்தைச் சிதைக்கும் இந்த மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இச்சேவையை கவலையீனமாகவோ மோசடியாகவோ அல்லது வேண்டுமென்றோ துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. அவரது அதிகாரம் பெற்றவர்களோ அனுமதியில்லாதவர்களோ இந்த உடன்படிக்கையை மீறும்வகையில் செயற்படின், அவர்களிடமிருந்து இழப்பீடுகளைப் பெறுவதற்கு ஸ்ரீலரெ இற்கு உரித்துள்ளது. மேலும். இந்த நிபந்தனையை மீறுயமைக்கான எந்தவொரு மூன்றாம் தரப்பினரதும் இழப்பீட்டைப் பெறுவதற்கும் ஸ்ரீலரெ இற்கு உரித்துள்ளது.

18) ஸ்ரீலரெ எந்தவித காரணங்களையும் தராமல், தனது வசதிக்கேற்றவாறு இச்சேவையை நிறுத்தக்கூடும்.

19) சேவைக்காரணங்களுக்காக, ஸ்ரீலரெ தனது சுய விருப்பின்பேரில், இச்சேவைக்கான வாடிக்கையாளரின் பொதியை மாற்றக்கூடும்.

20) வாடிக்கையாளரால் கோரப்பட்ட அகலப்பட்டையை இணைக்கும் செயற்பாடுகளின்போது, அவரின் தொலைபேசி இணைப்பானது அகலப்பட்டைக்குப் பொருத்தமில்லாதது என இனங்காணப்படும்பட்சத்தில், அவரின் விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை ஸ்ரீலரெ இற்கு உள்ளது. அந்தமாதிரியான சந்தர்ப்பத்தில், ஸ்ரீலரெ இனால் அறவிடப்பட்ட ஆரம்பக்கட்டணமானது, எந்த வட்டியோ அல்லது நட்ட ஈடோ இன்றி, வழங்கப்படும்.

21) எந்தவொரு ஸ்ரீலரெ இணைப்பின் மூலமாகவும் 1212 என்ற 24 மணித்தியால இலவச இணைய உதவிச்சேவை இலக்கத்தைப் பயன்படுத்தி, வாடிக்கையாளர் உதவியைப் பெறலாம். (குறிப்பிட்ட இணைப்புக்கு உதவி தேவைப்படுமானால், ஸ்ரீலரெ தனது தொழில்நுட்ப அலுவலரை வாடிக்கையாளரின் இடத்திற்கு அனுப்பிவைக்கும்.)

<u>வாடிக்கையாளர் உடன்படிக்கை</u>

நான்/நாம், என்னால்/எம்மால் இங்கே வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம். இந்த உடன்படிக்கையின் அங்கமான விதிகள் மற்றும் நிபந்தனைகளை நான்/நாம் வாசித்து, அவற்றுக்கும் எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சி இனால் அமுலாக்கப்படுபவைக்கும் உடன்படுகிறோம் என்று அறிவிக்கிறோம்.

கையொப்பங்கள்:

1. ..................................................................
2. ...............................................................

பொது முத்திரை

திகதி: ..........................................................

<u>ஸ்ரீலரெ ஏற்றுக்கொள்ளல்</u>

வாடிக்கையாளரால் வழங்கப்பட்ட தகவல்களை ஏற்று, தனது சேவையை வழங்குவதில் சிறப்பான முயற்சியை மேற்கொள்ளும். இச்சேவை வழங்கலானது; ஸ்ரீலரெ இற்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டவுடனே ஆரம்பமாவதுடன், இந்த உடன்படிக்கையின் ஒரு அங்கமான ‘ஸ்ரீலரெ இனால் வழங்கப்படும் தொலைபேசிச்சேவைக்கான நியதிகளும் நிபந்தனைகளும்’ நடைமுறைக்கு வரும்.

அதிகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம்: ...............................................

திகதி: .....................................................